மோட்டார் வாகனவிபத்து நஷ்ட்ட
ஈட்டுக்கோரிக்கை தீர்ப்பாயம்

(மாண்புமிகு தலைமை நீதித்துறை
நடுவர் நீதிமன்றம்)
நாகப்பட்டினம்.

M.C.O.P.NO. 10 / 2024.

மனுதாரர் தரப்பில் சாட்சி
அரவிந்தகுமார் ம.சா. 2 ஆக
தாக்கல் செய்த சாட்சிய
நிரூபன பிரமாணப்பத்திரம்

--------

Filed and received PW2 on 10/03/2026

10/03/2026

*M.S.சத்தியமூர்த்தி*,B.Com., B.L.,
*D.பரமசிவம்*, B.A., B.L.,
*D.விஜிலா*,M.A., B.L.,
வழக்கறிஞர்கள்,
நாகப்பட்டினம்.

மோட்டார் வாகன விபத்து நஷ்டஈட்டுக் கோரிக்கை தீர்ப்பாயம்

(மாண்புமிகு தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம்)
நாகப்பட்டினம்.
M.C.O.P.NO. 10 / 2024.

நித்யா. ------- மனுதாரர்/மனுதாரர்

எதிர்

அமுல்ராஜ் மற்றும் ஒருவர். ------ எதிர்மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்.

ஷை மனுதாரர் தரப்பில் சாட்சி அரவிந்தகுமார் ம.சா.2 ஆக தாக்கல் செய்த சாட்சிய நிரூபன பிரமாண பத்திரம்.

-------------

நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் தாலுக்கா, போலகம், கிராமம், பிள்ளையார் கோவில் தெரு, கதவிலக்கம் 2/11 முகவரியில் வசித்துவரும் சந்திரசேகர் அவர்கள் மகன் இந்து 29வயதுள்ள அரவிந்தகுமார் ஆகிய நான் இதனடியில் கண்ட சங்கதிகள் யாவும் உண்மையென்று சத்தியபிரமாணமாய் ஆணையிட்டு கூறுகிறேன்.

நான் மேற்கண்ட எனது முகவரியில் வசித்துவருகிறேன். நான் விவசாய கூலி வேலைகள் செய்து ஜீவனம் செய்து வருகிறேன்.

இந்த மனுவின் மனுதாரர் தரப்பு சாட்சியாவேன், நான் இந்த சாட்சிய நிரூபன பிரமாணப்பத்திரத்தினை மனுதாரர் தரப்பில் கூடுதல் சாட்சியம் முதல்விசாரணை அளிக்கும் பொருட்டு தாக்கல் செய்கிறேன்.

கடந்த 17.01.2023ம் தேதியன்று நான் எங்கள் வீட்டிற்கு சாமான்கள் வாங்கிவருவதற்காக இரவு 8.45 மணிக்கு இடையாத்தாங்குடிக்கு சென்று கடையில் ஜாமான் வாங்கிக்கொண்டு எனது இரண்டுசக்கர வாகனத்தில் என்வீட்டிற்கு செல்வதற்காக இடையாத்தாங்குடி பஸ்ஸ்டாப் அருகில் என் நண்பரோடு பேசிக்கொண்டிருந்தேன். அப்போது மேற்படி சாலையில் 'TN.51 AK.0201 என்ற பதிவெண் கொண்ட பைக்கில் இந்த மனுவின் மனுதாரரின் கணவர் கார்த்திக் (எ) கார்த்திகேயன் ஒட்டிக்கொண்டு பின்னால் அவரது மனைவியான இந்த மனுதாரர் நித்யாவை அமர்ந்துகொண்டு கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி சென்றனர், அப்போது எதிர்திசையில் வந்த PY.02 V-6815 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தினை ஓட்டிவந்த அதன் ஓட்டுநர் அதிவேகமாகவும் கவனக்குறைவாகவும், அஜாக்கிரதையாகவும் ஓட்டிச்சென்று எதிர்திசையில் சென்றுகொண்டிருந்த இந்த மனுவின் மனுதாரர் பயணம்ட செய்த மேற்படி இருசக்கர வாகனத்தின் மீது மோதிவிட்டார். அதில் இந்த மனுதாரர்

மற்றும் அவரது கணவரும் பலத்த காயங்கள் ஏற்பட்டு வலியால் துடித்துக்கொண்டிருந்தார்கள்.. நான் சம்பவத்தை நேரில் பாத்து அருகில் சென்று நானும் அக்கம் பக்கத்தில் உள்ளவர்களும் அவர்களை மீட்டு 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து, வரவழைத்து அவரை ஆம்புலன்ஸ்-ல் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தோம், மேற்படி விபத்து PY.02 V-6815 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தினை ஓட்டிய ஓட்டுநரின் அதிவேகத்தினாலும், அஜாக்கிரதையாலும் ஏற்பட்டது. மேற்படி விபத்து விபரம் எனக்கு நேரடியாக நன்கு தெரியும் என்பதற்காக இந்த சாட்சிய நிருபன பிரமாணப்பத்திரம் தாக்கல் செய்கிறேன்.

என்முன்பாக பிரமாணம் செய்து
நாகப்பட்டினத்தில் 10.03.2026ல்
இதில் கையொப்பம் செய்தார்.

வழக்கறிஞர்.

Rg no. 28/8/

இயக்கவூர்தி விபத்து கோரிக்கை தீர்ப்பாயம், நாகப்பட்டினம்
தலைமை நீதித்துறை நடுவர் நீதிமன்றம், நாகப்பட்டினம்.

**MCOP.No.10/2024 ம.சா.2**

பெயர். திரு. அரவிந்தகுமார் த/பெ. சந்திரசேகர்

கிராமம். போலகம் Age: 29

நாள்.10.03.2026 தொழில். தனியார் வங்கியில் மேலாளர்

நம்பர். 9791899920

**2026** –ஆம் ஆண்டு **மார்ச்** மாதம் **10–**ந்தேதி **செவ்வாய்கிழமை** Act X of 1973 ஆண்டின் சட்ட விதிப்படி **திரு. G. கிருஷ்ணன், பி.ஏ., எல்எல்.பி.,** தலைமை நீதித்துறை நடுவர் நாகப்பட்டினம், ஆகிய என் முன்னால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

**முதல் விசாரணை**

நான் இம்மனுவில் 3ம் நபர் ஆவேன். நான் எனது முதல் விசாரணை சங்கதிகளை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடைய கையெழுத்துதான். அதில் உள்ள சங்கதிகள் அனைத்தும் என்னால் உண்மை என கூறப்பட்டவைதான். எனவே நான் தாக்கல் செய்த முதல் நிலை நிரூபண பிரமாண வாக்குமூலத்தை எனது முதல் விசாரணை சாட்சியமாக பாவித்துக்கொள்ள வேண்டுகிறேன். வழக்கின் தன்மையை கருத்தில் கொண்டு **மனுதாரர் தரப்பு சாட்சி தாக்கல்** செய்த முதல் நிலை நிரூபண பிரமாண வாக்குமூலம் **மசா.2ன்** முதல் விசாரணையாக அனுமதிக்கப்படுகிறது.

**எதிர்மனுதாரர்கள் தரப்பு குறுக்கு விசாரணை**.

**1ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**. இல்லை.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**.

இந்த விபத்தில் காயமுற்றதாக சொல்லப்படும் கார்த்திக் என்ற கார்த்திகேயன் மற்றும் அவரது மனைவி நித்யா எனக்கு என்ன உறவுமுறை ஆக வேண்டும் என்றால்? அவர்கள் எனது உறவினர்கள் இல்லை, ஆனால்

G. [signature] 10/03/2026

அவர்கள் எனது ஊர்க்காரர்கள். நான் விபத்து நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் சாமான்கள் வாங்க எந்த வண்டியில் சென்றேன் என்றால் ? TN 51 AB 5904 என்ற Splender pro இருசக்கர வாகனத்தில் சென்றேன். அது யாருடைய வண்டி என்றால் ? என்னுடைய வண்டி. அது எந்த வருடம் வாங்கப்பட்டது என்றால் ? 2014. மனுதாரர் சென்ற வாகனத்தின்மீது மோதியதாக சொல்லப்படும் PY 02 V 6815 என்ற இருசக்கரவாகனம் என்ன வகையைச் சார்ந்தது என்றால் ? பல்சர் இருசக்கரவாகனம்.

இந்த விபத்தை கண்ணுற்றதாக சொல்லப்படும் நான் விபத்து குறித்து காவல் நிலையத்திற்கு தகவல் சொன்னேனா என்றால் ? இல்லை. நான் படித்தவர் மற்றும் வங்கி மேலாளர் என்று சொன்னால் சரிதான். இதுபோன்று விபத்து நடக்கும்போது அதை கண்ணுற்றதாக சொல்லப்படும் நான் அது குறித்து காவல் நிலையத்திற்கு உடனடியாக தகவல் சொல்ல வேண்டும் என்று எனக்கு தெரியும்தானே என்றால் ? தெரியும். இந்த விபத்து குறித்து காவல்துறை பதிவு செய்த குற்ற வழக்கில் என்னை கண்ணுற்ற சாட்சியாக காட்டியுள்ளார்களா என்றால் ? அதுபற்றி எனக்கு தெரியாது. இந்த விபத்து குறித்தும், அதை கண்ணுற்றதாக சொல்லப்படுவது குறித்தும் ஏன் நானாகவே சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்கு போய் தகவல் சொல்லவில்லை என்றால் ? நான்தான் காயம்பட்டவர்களை சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு கொண்டுபோய் சேர்த்தேன். அதுகுறித்து போலீசார் தகவல் அறிந்து கொண்டு, என்னை அழைத்து, நான் அவர்களை மருத்துவமனைக்கு கொண்டுபோய் சேர்க்கப்பட்டது குறித்து விசாரித்தார்கள்.

நான் சாட்சியம் அளிப்பதுபோல காயம்பட்டதாக சொல்லப்படும் நபர்களை நான் மருத்துவமனைக்கு கொண்டுபோய் சேர்க்கவில்லை என்றும், அதனால்தான் அதை காட்டும் வகையில் மனுதாரர் தரப்பில் விபத்து பதிவேட்டு

G. [signature] 10/03/2026 [signature]

ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றும், அதேபோல ம.சா.ஆ.1 ஆன முதல் தகவல் அறிக்கையிலும் நான்தான் காயம்பட்டவர்களை மருத்துவமனைக்கு கொண்டுபோய் சேர்த்ததாக சொல்லவில்லை என்றும், குறிப்பாக மனுதாரரே இந்த விபத்தினை நான் கண்ணுற்றதாகவும், மருத்துவனைக்கு அவரை நான்தான் சிகிச்சைக்காக கொண்டுபோய் சேர்த்தாகவும், சாட்சியம் அளிக்கவில்லை என்றும் சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது, ஆனால் நான்தான் 108 ஆம்புலன்ஸ்க்கு போன் செய்து அனுப்பி வைத்தேன். பின்னர் பின்னிட்டுதான் நான் சென்றேன். அதனால் அவர்களை நான் சிகிச்சைக்கு சேர்த்தாக மருத்துவஆவணத்தில் குறிப்பிடப்படவில்லை என சாட்சி சாட்சியம் அளிக்கிறார்.

நான் மேற்கண்டவாறு அளிக்கும் சாட்சியமும் தவறு என்றும், இந்த விபத்தில் காயம்பட்டவர்கள் 108 ஆம்புலன்ஸ் மூலம் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக செல்லவில்லை என்றும், அவர்கள் தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.1 ஆன முதல் தகவல் அறிக்கையிலேயே இந்த விபத்தில் காயம்பட்டவர்கள் அவ்வழியாக வந்த போக்குகார் மூலம்தான் காரைக்கால் மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக சென்றதாக சொல்லப்பட்டுள்ளது என்றும் சரிதான். மனுதாரர் எனது ஊர்க்காரர் என்பதால் அவர்கள் கேட்டுக்கொண்டபடி சம்பவத்தை கண்ணுற்றதாக பொய் சாட்சியம் அளித்துள்ளதால்தான் காயம்பட்ட மனுதாரர் எந்தவாகனத்தின் மூலம் மருத்துவமனைக்கு சென்றார், அவரை யார் கொண்டுபோய் சேர்த்தார்கள் என்பவைகள் குறித்து ஒன்றுக்கொன்று முரண்பட்ட வகையில் தவறாக சாட்சியம் அளித்துள்ளேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சி கூறியதை என்னால் திறந்த நீதிமன்றத்தில் பதிவு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**மறுவிசாரணை–** இல்லை.

10/03/2026.

தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர்
நாகப்பட்டினம்.